Women's Day Celebrations 2019




பிள்ளையார்குப்பம் கஸ்தூரிபாய் காந்தி செவிலியர் கல்லூரியில் நடந்த முப்பெரும் விழாவில், பாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழக துணை வேந்தர் சுபாஷ் சந்திர பரிஜா, செவிலியர் கல்லூரி பேராசிரியருக்கு பரிசு வழங்கினார்.

# செவிலியர் கல்லூரியில் முப்பெரும் விழா

பாகூர், மார்ச் 10 – பிள்ளையார்குப்பம் கஸ்தூரிபாய் காந்தி செவிலியர் கல்லூரியில் ஆண்டு விழா, விளையாட்டு விழா, மகளிர் தின விழா என முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது.

பாலாஜி வித்யா பீத் பல்கலைக்கழக துணை வேந்தர் சுபாஷ் சந்திர பரிஜா விழாவை துவக்கி வைத்து விளையாட்டின் முக்கியத்துவம் குறித்து பேசினார். செவிலியர் கல்லூரி முதல்வர் ரேணுகா, ஆண்டறிக்கை வாசித்தார். துணை முதல்வர் சுமதி முன்னிலை வகித்தார்.

சென்னையில் உள்ள தேசிய பேஷன் டெக்னாலஜி கல்வி நிலைய இயக்குனர் அனிதா மேபல் மனோகர், கல்வி பிரிவில் சிறப்பிடம் பிடித்த மாணவர்களுக்கும், புதுச்சேரி கடற்படை கமாண்டன்ட் சஞ்சிவ் திரிகா, விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

கஸ்தூரி பாய் காந்தி செவிலியர் கல்லூரியின் 'ஸ்பார்க்லெஸ்' என்ற சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. தொடர்ந்து, பாலாஜி வித்யா பீத் பல்கலைக்கழக மகளிர் அமைப்பு சார்பில் உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இதில், கல்லூரியில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த பெண் பேராசிரியர் மற்றும் ஊழியர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது. விழாவையொட்டி, மாணவ-மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சி நடந்தது. விழாவில், மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் நிர்மல்குமார், மருத்துவ கல்லூரி முதல்வர் ரவிசங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Dinamalar dated 10th March 2019.

"Triple Celebrations" at KGNC, Womens Day + Annual Day + Sports Day. Hon V.C. Prof S.C. Parija inaugurated the function & spoke about importance of Sports and cultural events in academic institutes. Mrs. Anita Maple Manohar, Director NIFT, Chennai graced the occasion and felicitated academic toppers. Women achievers in various specialities were honoured [illegible] Commerce, MS, MGMCRI.

REGISTRAR
SRI BALAJI VIDYAPEETH
(Deemed University u/s 3 of UGC ACT, 1956)
Accredited by NAAC with 'A' Grade
Pillaiyarkuppam, Pondicherry-607 402.